Registered M. 878

ஓம்

OFFICE OF ... 26 JAN 1926 MADRAS

# ஞானோதயம்.

பிரம்மஞான மாதாந்தரப் பத்திரிகை.

பத்திராதிபர்கள்

அ. ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ., பி. எல்., மதுரை.

வி. விசுவநாதய்யர் பி. ஏ. பி. எல், மதுரை.

தொகுதி 15 ] 1925-ஆம் பிப்ரவரி 21௳ [ பகுதி 8

பொருளடக்கம். பக்கம்

மதுரை பிரம்மஞான சபையாரால்
வெளியிடப்பட்டது.


1. பிரமஞானப்புதுயுகப் பேரொலி ... 225
2. புனர் ஜன்மம் ... 234
3. ஸ்ரீகனுடைய யாத்திரை ... 24[illegible]
4. வாசிலே அலைவது உண்மையின் வெற்றி... 247
5. தற்கால நிலைமை ... 251


வருஷசந்தா ரூ. 2-0-0. ] [தனிப்பிரதி 4 அணா

விளம்பர விகிதம்.

முறையாயமைவிருந்தால் பக்கத்திற்கு ரூ. 10

வந்தால் பக்கத்திற்கு ரூ. 12

பகுதிக்கு அவ்விதமே பங்கிடுக.

## "தியசாபிகல் சொசைட்டி" என்னும் பிரம்மஞ்ஞான சபை.

இது 1875-ஞ் நவம்பர் மீ 17வ அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் ஏற்பட்டுச் சென்னை அடையாற்றில் நிலைபெற்றிருக்கிறது. சமரச புத்தியோடு தத்துவ ஆராய்ச்சிக்கு ஒன்று சேருவோர்களின் சங்கம் இது. ஆதலால் இச்சங்கத்தார் நாஸ்திகத்தை கண்டித்து ஆஸ்திகபுத்தியை வளர்த்து மனிதவர்க்கத்திற்கு ஞான வழியில் உபகரிப்பவர்கள் ஆவர். இதன் முக்கிய கொள்கைகள் மூன்று:—

(1) ஜாதி, மதம், வர்ணம், வகுப்பு, ஆண், பெண் இப்பேதங்களின்றி ஸர்வஜன சோதரபாவம் நிலைபெறச் சாதகமாயிருத்தல்.

(2) வெவ்வேறான மதம், தத்துவ சாஸ்திரம் பௌதிக சாஸ்திரங்களை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்வதை ஆதரித்தல்.

(3) மனிதனிடத்தடங்கியுள்ள சக்திகளையும் நமக்கு விளங்கத் தெரியவாராத பிரபஞ்சநியதிகளையும் பரிசீலனஞ் செய்வது.

பிரம்மஞ்ஞான சபையில் சேருகிறவர்கள் எம்மதத்தாராகவும் இருக்கலாம். அல்லது ஒருமதத்தையும் அங்கீகரிக்காதவராகவும் இருக்கலாம். ஆனால் மேற்படி நோக்கங்களை ஒப்புக்கொண்டும், மத துவேஷங்களை ஒழித்து நல்லெண்ண முள்ளவர்களாயிருந்து கொண்டு தங்கள் மத அபிப்பிராயங்கள் எப்படியிருப்பினும் மதவுண்மைகளைப் படித்து மற்றவர்களோடு தங்கள் படிப்பைக் கலந்து கொள்ள விரும்பும் படிப்பாளிகள் இச்சங்கத்தில் ஒருங்கு சேருகிறார்கள். அவர்கள் ஒற்றுமைக்கு ஒரே பொது நம்பிக்கை காரணமல்ல; தத்துவத்தைக் கண்டறியும் ஒரே லக்ஷியத்தோடு அவர்கள் ஒருங்கே முயற்சிப்பது தான் காரணம்.


**இந்தப் பத்திரிகை வேண்டுபவர்கள்**

K. நாராயணசாமி அய்யர்
பென்ஷன் சப்மாஜிஸ்திரேட்
ஞானோதயம் ஆபீஸ் மானேஜர்.
பெருமாள் தெப்பக்குளம் தெரு மதுரை
என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.



**Registered M. 878**

ஓம்

# ஞானோதயம்.

பிரம்மஞ்ஞான மாதாந்தரப் பத்திரிகை.

பத்திராதிபர்கள்

அ. ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ., பி. எல்., மதுரை.
வி. விசுவநாதய்யர் பி. ஏ. பி. எல், மதுரை.

தொகுதி 15 ] 1925-ஞ் பிப்ரவரி 21வ [ பகுதி 8


## பிரமஞானப் புதுயுகப் பேரொலி.

எல்லாப் பொருள்களையும் தன்னுள்ளடக்கித் தானே அவையாகியும் அவைகட் கப்பாலாகியும் எங்கும் எக்காலத்தும் குறைவற நிறைந்து சர்வ சக்தியுடன் விளங்கும் ஜோதிர்மயப் பரம்பொருளே கடவுளெனப்படுவர்.

கடவுளை அளவுக் கடங்காத ஒருபெரிய அக்கினிப்பிழம்புக்கு ஒப்பிடுவோமாயின் ஜீவனை அப்பெருந் தீயிலிருந்து சிதறும் ஒரு சிறிய பொறிக்கு ஒப்பிடலாம். கடவுளாகிய பெருந் தீயின் குணங்கள் யாவும் பொறியினிடத்தும் உளவாதலால் ஜீவன் கடவுளின் அம்சமெனப்படுவான்.

சிறு பொறி மாத்திரையாயுள்ள ஜீவன் விகாச முறையில் தேர்ச்சிபெற்று சாலோக, சாமீப, சாரூப, சாயுஜ்யமென்று சொல்

[illegible]ட்ட பதவிகளை அடைந்து எவ்விதத்திலும் கடவுளைப்போல் அவருக்கு சமானமாக வேண்டும்.

நனவு அதாவது ஜாக்கிரகம், கனவு அதாவது நித்திரை அல்லது சொப்பனம், சுஷுப்தி அதாவது நனவு கனவு ஆகிய இரண்டு தன்மைகளும் அற்றநிலை முதலிய நிலைமைகளில் பிரதி தினமும் உலவிவரும் தன்மையுள்ள ஜீவனைத்தான் மனிதன் என்று கூறப்படுகிறது.

மனிதன் என்பவன் கால், கை முதலிய உறுப்புக்களோடும், கண், காது, மூக்கு முதலிய சாளரத் துவாரங்களோடும் கூடிய ஸ்தூல சரீரமல்ல. ஆனால் நம்முடைய சரீரத்தில் உள்ளும் வெளியும் ஓதப்புரோதமாகக் கலந்து அக்கினியிற் சூடுபோல அபின்னமாய் எங்கும் வியாபித்து ஸ்தூல சூட்சும, காரண சரீரம் முதலிய போர்வைகளையும், சப்த, ஸ்பர்ச ரூப ரச கந்தங்களாகிய தன் மாத்திரைகளையும், மனம், புத்தி, சித்தம் அகங்காரமாகிய அந்தக்கரண சதுஷ்டயங்களையும் தனக்குக் கருவிகளா யமைத்துக்கொண்டு வியவகரிக்கும் ஜீவன் தான் மனிதனெனப்படுவன்.

மனிதன் என்னும் ஜீவனுக்கு ஸ்தூல சரீரம், சூட்சும சரீரம், காரண சரீரம் முதலிய பல சரீரங்கள் உண்டு. அச் சரீரங்கள் யாவும் ஓதப் புரோதமாக ஒன்றிலொன்று ஊடுருவிக் கலந்திருக்கின்றன.

நனவு (ஜாக்கிர) அவஸ்தையில் இப்பூலோகத்தில் வசிக்கிறான்; கனவு அவஸ்தையில் இப்பூலோகத்துக்கு மேற்பட்டதும் இவ்வுலக அணுக்களைவிட மிக நுட்பமான அணுக்களால் அமைக்கப்பட்டதும்அதிகப்பிரகாசமுள்ளதும்இப்பூலோக வஸ்துக்களைப்போன்றே சர்வ வஸ்துக்களும் பொருந்தியதாயுமுள்ள புவர்லோகம் அல்லது சூட்சும லோகத்தில் வசிக்கிறான். கனவற்ற நித்திரை அதாவது சுஷுப்தி அவஸ்தையில் மேற்கூறிய சூட்சும லோகத்துக்கு மேற்பட்டதான சுவர்க்கலோகத்தில் வசிக்கிறான்.



பூலோக வாழ்க்கையில் ஸ்தூல சரீரத்திலும், புவர்லோக வாழ்க்கையில் சூட்சும சரீரத்திலும் சுவர்க்கலோகம் முதலாகிய இதர உலக வாழ்க்கையின் கண் காரண சரீரம் முதலிய சரீரங்களிலும் பிரஞ்ஞையுடையவனா யிருக்கிறான்.

ஆனால் விகாச முறையில் கீழ்ப்படிகளிலிருக்குங்கால் மனிதன் ஓர் உலக வாழ்க்கையிலிருக்கும் போது மற்றொருலகவாழ்க்கையின் பிரஜ்ஞை இராது. ஒன்று மறைந்தால்தான் மற்றொன்றில் பிரஜ்ஞை எற்படும். விகாசமுறையில் தேர்ச்சியடைவானாயின் ஒருலக வாழ்க்கையிலிருக்கும்போதே மற்றொருலக வாழ்க்கையின் பிரஜ்ஞையு மேற்படும்.

கடவுளிடமிருந்து அணுமாத்திரையாக (அளவாக) வந்த ஜீவன் படிப்படியாக விருத்தியடைந்து உலக அனுபவங்களைக் கிரகித்து சர்வ சக்தியையும், வியாபகத்தையும் அடைய வேண்டியதற்காக, சத்யலோகம், தபோலோகம், ஜனலோகம், மகர்லோகம், சுவர்லோகம், புவர்லோகம், பூலோகம் என்று சொல்லப்பட்ட ஏழு உலகங்கள் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் கீழானதாயுள்ள பூலோகத்தில்தான் நாம் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இவ்வேழுலகங்களும் ஒன்றைவிட மற்றொன்று நுட்பமான அணுக்களால் அமைக்கப்பட்டு ஒன்றிலொன்று ஊடுருவிக் கலந்திருக்கின்றன.

இவ்விதம் ஏழு உலகங்கள் அல்லது வகுப்புக்கள் பொருந்தியதாயுள்ள ஈசுவரனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கலாசாலையின்கண் ஜீவன் பல ஜன்மங்கள் எடுத்து எல்லா அனுபவங்களையும் கிரஹித்துத் தேர்ச்சி பெறுவானாயின், அவன் ஜனன மரணங்களாகிற அவஸ்தையிலிருந்து விடுபட்டு உலக விகாசத்தின் ஆதிக்யத்தைப் பெற்ற மனு, போதிஸத்வர் அதாவது ஜகத்குரு அல்லது திருலோககுரு முதலிய மகரிஷிகளாகிய ஜீவன் முக்தர் ஸ்தானங்களையும், சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் முதலிய தொழில்களைச் செய்ய சாமர்த்தியம் வாய்ந்த பிரமன் விஷ்ணு, ருத்திரன் முதலிய பதவி

களையுமடைகிறான். (அனுமார் பிரஹ்மபட்டத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் என்பதுவே போதுமான சான்று)

மனிதன் என்று சொல்லப்பட்ட ஜீவன் ஒவ்வொருவனும் விகாச முறையின் கீழானபடிகளில் கல் முதலிய கடினப் பொருள்களிலும், செடி கொடி விருக்ஷ முதலிய தாவரப் பொருள்களிலும், ஊர்வன நடப்பன பறப்பன முதலிய ஜங்கமப் பொருள்களிலும் அதாவது தாது வர்க்கம் விருக்ஷவர்க்கம், பக்ஷிவர்க்கம், மிருக வர்க்கம் முதலியவைகளில் பல ஜன்மங்களை எடுத்து நெடு நாளிருந்து பிறகு மானிட ஜன்மத்திற்கு வருகிறான். மானிட ஜன்மத்தை அடைந்தது முதல் மனிதன் அதாவது நினைத்துப் பார்க்கும் தன்மையுள்ளவன் என்று சொல்லப்பட்ட ஜீவனுக்கு சுயேச்சை என்னும் சக்தியானது கொடுக்கப்படுகிறது.

மேற்கூறிய ஏழு உலகங்களுக்கும் உற்பத்தியும் நாசமும்உண்டு. உற்பத்திக்கிரமத்தில் மேலான உலகத்திலிருந்தும் நாசக்கிரமத்தில் கீழான உலகத்திலிருந்தும் உற்பத்தியும் நாசமும் ஏற்படுகின்றன. ஆனால் ஒரு உலகத்திலுள்ள ஜீவர்கள் விகாச முறையின் குறிப்பிட்ட பக்குவத்தை அடைந்து விட்டபிறகோ அல்லது ஒரு உலகமானது ஜீவர்களின் விகாசத்திற்கு யோக்கியமற்றதாகப் போன காலத்திலோ அவ்வுலகத்துக்கு நாசமேற்பட்டு விடுகிறது. அது நாசமடையுங்கால் அதில் ஜீவர்கள் அடைந்த தேர்ச்சிக்கிரமத்தையும் ஒழுங்குகளையும் மேலுலகவாசிகளாயுள்ள மகரிஷிகள் திரட்டி வைத்திருந்து மறுபடி முன்போன்ற தான ஒருலகம் சிருஷ்டிக்கப்படும் போது அதில் விகாசமடைய வேண்டிய ஜீவர்களுக்கு அனுகூலமாயிருக்கும் பொருட்டு சட்ட திட்டங்களாகக் கொடுக்கிறார்கள். வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் எனச் சொல்லப்படும் ஆப்த வாக்கியங்கள் இவைகளே.

மனித ஜன்மத்தை அடைந்து சுயேச்சை யென்னும் சம்பத்தைப் பெற்றிருக்கும் ஜீவன், மேற் சொல்லப்பட்ட வேத சாஸ்திர புராணம் முதலிய நூல்களில் கூறப்பட்டதாயுள்ள சன்மார்க்கத்தில்



நடப்பானாயின் அவன் மேலான பதவியை அடைவான். அவ்விதமன்றி தனக்குக் கிடைத்திருக்கும் சுயேச்சை யென்னும் சக்தியை தன்மனம் போனபடி கெட்ட வழியிற் செலுத்துவானாயின், தனக்குத் தானே தீங்கு தேடிக் கொண்டவனாகிறான். அவனுக்குச் சமீபகாலத்தில் மேற்பதவி கிட்டாது. ஈசுவர நியதியாகிய மேற் கூறிய சட்ட திட்டங்களுக்கு மாறி நடப்பதைத் தான் பாபமென்றும் அவைகளை அனுசரித்து நடப்பதைப் புண்ணியமென்றும் சொல்லப்படுகிறது.

மனித ஜன்மத்தில் சுயேச்சை யென்னும் சக்தியானது கொடுக்கப்பட்டது முதல் மனிதனுக்கு கர்ம பந்தம் ஏற்படுகிறது. தனக்கேற்பட்டிருக்கும் சுயேச்சையை உபயோகிக்கும் மார்க்கத்துக்குத் தக்கவாறு நல்ல கருமங்களையோ கெட்ட கருமங்களையோ சேகரிக்கிறான். இப்படி அவன் தேடும் கருமங்களை அவன் அநுபவித்தே தீர வேண்டும். அவன் மனோ வாக்கு காயங்களால் செய்யும் சத் கருமங்கள் அவனுடைய ஸ்தூல சூட்சும, காரண சரீரங்களுக்கு பலம், தேஜஸ், சக்தி, அறிவு முதலியவைகளை மென்மேலும் பெருகச் செய்கின்றன. கெட்ட கருமங்கள் அச்சரீரங்களுக்கு ஒளிக்குறைவையும் குரூபத்தையும் அறிவின்மையையும் ஏற்படுத்துகின்றன.

மனிதன் செய்யும் கருமங்கள் சத்கருமமாயினும் கெட்ட கருமமாயினும் இரண்டும் பந்தத்துக்குக் காரணமாதலாலும், கருமத்தைச் செய்வதால் மட்டுமே விகாச முறையிற் தேர்ச்சிபெறவேண்டுமாதலாலும் கர்மத்தை எவ்விதம் செய்தால் பந்தத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளலாம் என்பதை மனிதர்கட்குப் போதிப்பதற்காகவே பகவான் கிருஷ்ணாவதாரம் செய்ததாகக் கொள்ள வேண்டும்! ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறியுள்ள ஸ்ரீ பகவத் கீதையின் சாராம்சத்தை அறிந்து நடப்போமாயின், நாம் நம்மைக் கர்மபந்தத்திலிருந்து விடுவித்துக் கொள்ளலாம். மனிதன் ஒவ்வொருவனும் தான் எடுத்திருக்கும் இச்சென்மத்தில் தனக்கேற்பட்டுள்ள கன்மங்களை நல்லதாயிருந்தாலும் கெட்டதாயிருந்தாலும் விருப்பு

வெறுப்பின்றிச் செய்து அதன் பலனை ஈசுவரார்ப்பணம் செய்வதும், கைம்மாறு கருதாது உலகத்திலுள்ள சர்வ ஜீவராசிகளிடத்தும் அன்புகூர்ந்து அவைகட்குதவிபுரிவதும் தான், கன்மபந்தத்திலிருந்து மனிதன் தன்னை விடுவித்துக் கொள்ள வழி யென உபதேசித்திருக்கிறார்.

மனிதர்கள் இவ்விதம் கன்மங்களைச் செய்து மேற்கூறிய ஏழு உலகங்களிலும் விகாச முறையிற்றேர்ச்சி பெற்று வருங்கால் அவர்களுக்கு உதவி புரிவதற்காக ஆங்காங்கு தேவர்களும், நம்மைப்போல் மனித ஜன்மத்தை அடைந்து விகாச முறையில்தேர்ச்சி பெற்று ஜனனமரண அவஸ்தைகளிலிருந்து விடுபட்டு சுயேச்சையுடன் இருந்துவரும் மகரிஷிக் கூட்டங்களும் அவர்களின் சிஷ்யவர்க்கங்களும் இருந்துகொண்டு ஒத்தாசை செய்து வருகிறார்கள். அவர்கள் முக்காலத்தையு முணர்ந்த முனிவர்கள். ஈசுவரசங்கற்பத்தின் நியதியைத்தெரிந்தவர்கள். இவ்வுலகவிகாசத்தின் ஆதிபத்தியம்இவர்களைச் சார்ந்தது. இவர்களைத் தான் தாயுமானவர் "வித்தகச் சித்தர்கண" மெனக் கூறினார். வெள்ளியம்பலத்தாரெனும் பெயரும் இவர்கட்குண்டு. லோக பரிபாலனத்தின் ஆதிபத்தியத்தைப்பெற்ற இம்மகரிஷிகள் ஈசுவர நியதியைத் தெரிந்தவர்களாதலால் அவ்வொழுங்கிலேயே உலகம் விகாசம் பெற்று வருவதற்காகப் பாடு பட்டு வருகிறார்கள்.

வெள்ளியம்பலத்தாரென்று சொல்லப்பட்ட இத்திருக் கூட்டத்திற்குத் தலைமை வகித்திருக்கும் மஹான் ஸ்ரீ ஸனத்குமாரர். அவரை சுப்பிரமணியரெனவும், தக்ஷிணாமூர்த்தி யெனவும் கூறுவதுண்டு. அவருக்குக் கீழாக ஏழு மந்திரிகளாகிய மகரிஷிகள் உலக விகாச முறைக்கிரமத்திலுள்ள பல பிரிவுகளில் ஒவ்வொன்றை ஒவ்வொருவர் வகித்து, தங்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்ட படிகளிலுள்ளவர்கள் மூலமாகவும் தங்கள் சிஷ்யர்கள் மூலமாகவும் நடத்திவருகிறார்கள். அவர்களிற் சிலர் உலகத்தில் பக்குவமடைந்தவர்களா யிருக்கும் ஜீவர்களைப் பொறுக்கி யெடுத்து தங்களுக்கு சிஷ்யர்களாக அமைத்துக் கொண்டு உலக விகாசத்திற்காகப் பாடு



பட அவர்களைப் பழக்குகிறார்கள். அப்படி அவர்களால் சிஷ்யர்களாக அங்கீகரிக்கப்பட்டவர்கள் அவர்களுடையும் தேர்ச்சிக்குத் தக்கவாறு காலக்கிரமத்தில், குடீசகன், பஹூதகன் ஹம்ஸன், பரமஹம்ஸன் என்னும் தீக்ஷைகளையும் பெற்று மகான்கள் என்றுசொல்லப்பட்ட பதவிகளை அடைந்து அத்திருக்கூட்டத்திலொருவராகச் சேர்ந்துவிடுகிறார்கள். மேற்கூறியமகான்கள்சூட்சுமஉலகங்களிலும் ஸ்தூல உலகத்தின் மிகப் புனிதமாயுள்ள பாகங்களிலும் இருந்து கொண்டு உலக விகாசத்தை நடத்தி வருகிறார்கள். ஆவசியகம் நேரிட்ட காலங்களில் தங்களுக்கு ஓர் ஸ்தூல சரீரத்தை ஏற்படுத்திக்கொண்டு ஜனங்களுக்கு மத்தியில் நம்மைப்போல் உயிர் வாழ்பவரென மனிதர் நினைக்கும்படி நடந்து அவசியமான சீர்திருத்தங்களைச் செய்கிறார்கள். அவதார புருஷர்களெனப் பல மதஸ்தர்களாலும் கொண்டாடப்படும் புண்ணிய புருஷர்கள் யாவரும் இத்திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களே. உலகத்தில் ஜனங்கள் அடைந்திருக்கும் புத்தியின் பரிபாகத்துக்குத் தக்கவாறு ஆங்காங்கு பல மதங்களை ஸ்தாபித்திருப்பவர்கள் இம்மகான்களே. உற்று நோக்குமிடத்து எல்லா மத சாஸ்திரங்களுக்கும் ஆதாரமாயுள்ள உண்மைகள் ஒன்றாகவே இருப்பதற்குக் காரணம் இதுதான்.

பேதபுத்தியாலும் அறிவின்மையாலும் இப்போது இவ்வுலகம் அடைந்திருக்கும் ஓர் பெருங் குழப்பத்தையும் சங்கடத்தையும் போக்கி சர்வத்ர சகோதரத்வம், அன்பு முதலிய சமரச சன்மார்க்க நிலைமை புகட்டுவதற்காகவும், இவ்வுலகம் முடிவடையுமுன் இதில் விகாசமடையும் ஜீவர்களில் ஐந்தில் இரண்டு பங்கு ஜீவர்கள் மேற்கூறிய மகரிஷித் தன்மையை அடைய வேண்டியவர்களாதலால், பக்குவமாயுள்ள ஜீவர்களை தீக்ஷா மார்க்கத்துக்குத் தயார் செய்வதற்காகவும் சமீபகாலத்தில் ஓர் மகானொருவர் அவதாரம் செய்யப் போகிறார். அம்மகான் தான் இக்கலியுக ஆரம்பத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவானால் விதுரருக்கு ஞானோபதேசம் செய்யும்படி உத்தவர் மூலமாக ஆக்கியாபிக்கப்பட்ட ஸ்ரீமைத்திரேய மகரிஷி. கலியுகத்

தில் ஜனங்களின் ஞான விகாசம் இவரைச் சார்ந்தது. இவர் தான் திருலோககுரு ஸ்தானத்தை இப்போது வகித்திருப்பவர்.

உலகத்தில் மகான்களின் அவதாரங்கள் ஏற்படும் காலங்களிலெல்லாம் அவர்களுக்குத் தீங்கிழைப்பதற்காக ஓர் கெட்ட சக்தியானது பாவி ஜனங்களைத் தூண்டுவது தொன்று தொட்ட வழக்கம். ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவதாரம் செய்த காலத்தில் கம்சன் துன்பம் செய்யத் தலைப்பட்டான். அதேமாதிரி கிருஸ்து, மகமது முதலிய தீர்க்கதரிசிகள் அவதாரம் செய்த காலத்தில் ஜனங்கள் கொடுமை செய்தார்கள். ஸ்ரீமத் ஆதி சங்கராசாரியார் அதி பால்யத்தில் தன் தாயாருடன் ஊரைவிட்டுத் துரத்தப்பட்டார்.

அம்மகான் அவதாரம் செய்யும் காலம் சமீபித்து விட்டபடியால், அவர் வருங்காலத்தில் ஜனங்கள் அவரைத் தெரிந்து கொண்டு வரவேற்குமாறு இப்போது முதற்கொண்டு அதற்காக பிரயத்தனங்கள் நடந்து வருகின்றன. இக்கருத்தைக் கொண்டே பிரமஞான சங்கம், உதய நக்ஷத்திர சங்கம் ஆத்ம பரிபக்குவ சங்கம் முதலிய சங்கங்களில் பலவித ஏற்பாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

உதய நக்ஷத்திர சங்கம் என்பது அப்படிப்பட்ட மகான் ஒருவர் சமீபகாலத்தில் அவதாரம் செய்யப் போகிறார் என்பதில் நம்பிக்கையுள்ளவர்கள் கூடி அம்மகான் வருங்காலத்தில் அவரைத் தெரிந்து கொண்டு வரவேற்பதற்காக ஏற்பட்டுள்ளது. ஆத்ம பரிபக்குவ சங்கமென்பது ஷெடி உதய நக்ஷத்திர சங்கத்தின் ஓர் பிரிவு. தங்கள் மனோ வாக்குக் காயங்களால் செய்யும் கருமங்கள் யாவும அக்குருநாதனால் ஒப்புக்கொள்ளப்படத் தக்கவாறு சீர்படுத்திக்கொண்டு, அவர் வருங்காலத்தில் அவருக்குத் தொண்டர்களாக நின்று, அவரைப் பின்பற்றி நடந்து அம்மகான் புரியும் ஈசுவர கைங்கர்யத்தில் தாங்களும் ஒத்துழைப்பதுவே அச்சங்கத்தினர்களின் உறுதிப்பாடு. மொத்தத்தில் இச்சங்கங்களின் நோக்கங்களெல்லாம் மனிதர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் மனோ வாக்குக் காயங்களால் செய்யும் காரி



யங்களை நல்வழியில் ஒழுங்குபடுத்திக் கொண்டு, குருநாதன் வருங்கால் அவரை வரவேற்று, அவருக்குத் தொண்டர்களாக நின்று உலகத்தார் எவ்வகையிலும் சுகநலம் பெறுவதற்காக அவர் செய்யும் வேலையில் தாங்களும் இயன்ற மட்டில் ஒத்துழைத்து தீக்ஷைக் கிரமங்களைப் பெற வேண்டுமென்பதே.

இப்போதேற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தைப் போன்ற அவகாசங்கள் ஏற்படுவது ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கொரு முறைதானிருக்கு மாதலால், இச்சமயம் தப்பினால் எச்சமயம் வாய்க்குமோவெனத் தாயுமானவர் கூறியுள்ளபடி எதிர்ச்சையாகக் கிடைத்திருக்கும் இதை நழுவ விட்டுவிடாது மேற்கூறியவற்றை நன்காராய்ந்து அவைகளிற் சேர்ந்தொழுகுவோமாயின் நாம் சீக்கிரத்தில் நற்கெதி பெறலாம்.

அப்படிக்கின்றி ஆண்டி மாடுவந்து தானே மடல் சாத்த வேணும் என்ற பழமொழிப்படி என்றைக்காவதொருநாள் நாம் அப்பேர்ப்பட்டபதவிகளை அடையத்தானே வேண்டும், இப்போதென்ன அவசரம் என்று நினைத்து இருந்து விடுவோமாயின் உண்மை ஞானத்தை அறியாமல் நம்மனம் போனபடி யலைந்து புனரபிஜனனம் புனரபி மரணம் என்றபடி பலதரம் மரித்து மரித்துப் பிறந்து சங்கடப்பட்டு உழலும் சீர்கெட்ட வாழ்க்கைக்குள்ளாவோம்.

மகான் ஒருவர் சமீப காலத்தில் அவதாரம் செய்யப் போகிறாரென்பது பிரமஞான சங்கத்தாருள்ளும் உதய நக்ஷத்திர சங்கத்தாருள்ளும் கொண்டாடப்படும் வீண் கோட்பாடன்று. பல மதங்களிலுமுள்ள தீர்க்கதரிசிகளாலும் பக்தர்களாலும் யூகசாலிகளாலும் வெளியிடப்பட்டிருக்கும் விஷயம். சமீபத்தில் வெளிவந்துலவும் “காலஞானம்” என்னும் புத்தகமே ஒரு சான்றாகும்.

“ஐயன் வரும் சமயமிது” வென்று அருட்பிரகாச வள்ளலார் கூறியிருப்பதை நம்பி நடந்துய்வோமாக! தூங்காதீர்கள்! எழுந்திருங்கள்!! சமயத்தைத் தவர விடாதீர்கள் !!!

ஓம் தத் ஸத்

# புனர் ஜன்மம்.

(202-ம் பக்கத் தொடர்ச்சி).

இன்னும் வேறு சிலர் ஒவ்வொரு மனுஷ்யப் பிறப்பிற்கும் ஒவ்வொருதரம் ஈசுவரன் சிருஷ்டிக்கிறார் என்கிறார்கள். விசித்திரமான வித்தியாசங்கள் எல்லாம் ஈசுவரனுடைய சித்தம். ஒருவனை மடையனாகப் பிறப்பித்தலும் மற்றொருவனை ஞானவானாகப் பிறப்பித்தலும், ஒருவனைத் தனவந்தவனாகவும் மற்றொருவனைத் தரித்திரனாகவும், ஒருவனை அதிகாரியாகவும் மற்றொருவனைச் சேவகனாகவும், ஒருவனைக் கூன்குருடு செவிடு பேடாகவும் மற்றொருவனை மன்மதனாகவும் பிறப்பித்தலும் ஈசுவரனுடைய சித்தமென்று பிதற்றுகிறார்கள். அவர்களுடைய கொள்கையைப் பின்னால் யோசித்துப் பார்ப்போம்.

சகல வித்தியாசங்களும் குலபாரம்பராப்பிராப்தம் என்னுங் கொள்கையை முன்னால் விசாரிப்போம். ஸ்தூல சரீர சம்பந்தமான விசேஷங்கள் யாவும் பிதிருபைதாமகமே. முகச் சாயல் நடையுடை பாவனை சில அவயவாதிகளினமைப்பு—இவைகள் தாய் தந்தையர்களிடத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்டவைகளே! ஆனால் மனோபாவ வித்தியாசங்களும் தர்மாதர்மஞ் ஞான வித்தியாசங்களும் அவ்விதம் பெற்றோர்களிடத்திலிருந்து பெற்றுக் கொண்டதாகச் சொல்ல முடியவில்லை. இது விஷயத்தைத் தத்துவ சாஸ்திரங்களே நிர்ணயித்திருக்கின்றனர். இரட்டைப் பிள்ளைகள் பிறக்கிறார்கள். ஒரே கர்ப்பத்தில் ஒரே சமயத்தில் ஒரே மாதிரியாக ஜனித்து சிறிது காலம் பாலூட்டுந் தாய்க்குக் கூடத் தேக வித்தியாசந் தோற்றாது வளர்ந்து காலவளவில் மனோ பாவத்திலும் விவேகத்திலும் வித்தியாசப் படுகிறார்களே! இதற்குக் காரணம் என்ன? நல்ல உயர்ந்த குடும்பத்தில் துச்சரிதனான அஸமஞ்சன் ஒருவன் பிறப்பானேன்? காட்டுமிராண்டிகள் குடும்பத்தில் நாகரீக சீலன் ஒருவன் பிறப்பானேன்? மிலேச்சர் குடும்பத்தில் "கள்ளி வயிற்றில் அகிற் பிறக்கும்" என்பதுபோல ஞானி ஒருவன் பிறப்பானேன்? இவைகளெல்லாம் பிதிருபைதாமகமா?



உணர்ச்சி விசேஷங்களும் மனோ பாவ வித்தியாசங்களும் ஜீவாத்மாவைப்பற்றியவை, ஸ்தூல சரீர சம்பந்திகளல்லவென்றால், புனர் ஜன்மகதி யென்னும் கொள்கை சித்திக்கும்.

ஆஸ்திரேலியா கண்டத்திலுள்ள காட்டு மிராண்டிகளும் இலங்கைத் தீவிலுள்ள வேட்டுவர்களும் போர்ணியோ தீவிலுள்ள ரோமம் வளர்ந்த தேஹிகளும்—இவர்கள் போன்ற மற்றையோர்களும் அப்படி யப்படியே மரித்த பிறகு ஈசன் சன்னிதானத்தில் நித்ய ஸூரிகள் ஜீவன் முக்தர்கள் சித்தர்கள் ஞானி கணங்கள் பக்கத்திலே நிற்கப்போகிறார்களென்றால் இதனினும் ஹாஸ்யத்திற்கிடமான செய்தி வேறுண்டோ? காட்டு மிராண்டிகளும் துச்சரிதர்களும் ஜிவன் முக்தர்களாகிப் பிறகன்றோ ஈசன் சன்னிதானத்தில் நிற்க வேண்டும்? அதற்குப் புனர்ஜன்ம கதியன்றிவேறு சமாதானமுண்டோ? காட்டுமிராண்டி ஜீவன் முக்தனாக வளர்வதற்குத் தகுந்த அவகாசத்தையும் அனுகூலமான அனுபவங்களையும் ஏற்படுத்தித் தரக்கூடிய வழி புனர் ஜன்மமொன்றே! மேலும் இன்று காட்டுமிராண்டியாக விருப்பவன் காலவளவில் ஜீவன் முக்தனாகிறான். ஜீவன் முக்தனாக விருப்பவன் சென்ற ஜன்மங்களில் காட்டுமிராண்டியாக யிருந்தவன் தானே?

மேலும் பாலாரிஷ்டம் ஏற்படுவானேன்? ஜீவாத்மா தான் செய்த பாவத்திற்காகவா அவனது பெற்றோர் செய்த பாவத்திற்காகவா பால்யாவஸ்தையில் மரிக்கின்றான்? முன்னைப் பின்னை பிறக்கவில்லை யென்றால் புதிதாய்ப் பிறந்த ஜீவனுக்கு முன் செய்த பாவமில்லை. ஆதலால் பாலாரிஷ்டமேன்? அவ்விதம் பாலாரிஷ்டமேற்பட்டால் கால வியர்த்தமும் முயற்சி வியர்த்தமுமாகத் தானே முடியும்? ஈசனுடைய சித்தமென்றால் ஈசன் அறிவீனனா? அதை விசாரிக்கப்படாதென்றால் நமக்கு அறிவென்னத்திற்கு?

மேலும் வயோதிகர்கள் அனுபவத்திலும் ஞானத்திலும் முதிர்ந்தவர்கள் ஆனதினால் சாதா ஜீவவந்தர்களாக விருந்தால் நமக்கு நலம் தான். அவர்களுடைய அனுபவ ஜன்ம ஞானத்தினால் உலகம் கடைத்தேறும். ஆனால் அவர்கள் நமக்கு எப்போது தேவையோ

அப்போது இறந்துபோகிறார்கள். என்? அவர்களுடைய சரீரம் மரிக்க வேண்டியது தான். ஆனால் அவர்களுடைய ஞானமும் மரித்தே போய்விடுமானால் ஈசுவரனுடைய ஆஞ்ஞாசக்கரத்தை யொடித்தெறிந்து விடலாம். செட்டுஞ் சீருந் தெரியாத வீசனை விட ஒரு கட்டையைத் தெய்வமென்று தொழலாம்! அப்படியல்லவேயல்ல! ஞான முதிர்ச்சியடைந்தோர் புனர் ஜன்மமெடுத்து நமது ஜன ஸமூகத்தில் மறுபடியும் வந்தால் அந்த ஞானமும் நமக்குத் திரும்பிவந்து விடாதோ?

மேலும் இன்னுமோர் அதிசயம் உண்டு! புனர் ஜன்மமென்பது இல்லாவிட்டால் பெற்றோர்கள் வயோதிகர்களான பிறகு பிள்ளைகள் பிறப்பது நலம். ஏனெனில் வயோதிகர்களுக்கு அனுபவஞ்ஞானம் பெரிதானதினால் அவர்களுக்கு வயது காலத்தில் பிறக்கும் குழந்தைகள் புத்தியிற் சிறந்தவர்களாயிருப்பார்கள். அதிகச் செலவும் சிரமமுமில்லாமல் புத்தி கூர்மை செழிக்க வேண்டுமானால், அனுபவமில்லாத காலத்தில் தாய் தந்தையர்களுக்குக் குழந்தைகள் பிறக்காமலிருப்பதே நலம். அறிவாளியான ஈசுவரன் அப்படியே செய்திருக்க வேண்டும். ஆனால் நம்முடைய அனுபவத்தில் அப்படியில்லை. தாய் தந்தையர்களுடைய யௌவன தசையில் வேண்டிய குழந்தைகள் பிறக்கின்றனவே யொழிய வயோதிக தசையில் பிறக்கக் காண்பது அபூர்வம்.

வாழையடி வாழையாய் வம்சக்கிரம வழியில் மனோ பாவங்களும் குணங்களும் இறங்கிவரும் என்று சொல்லுவோர் சதா வாழ்க்கையில் வாழ்க்கை நிலைப்பதற்கே ஒருவிதமான விரோத பாவமும் ஜனங்களுக்குள் போட்டியும் பொறாமையும் பொச்சரிப்பும் வேண்டுமென்றும் அவ்விதமாக ஒருவரோடொருவர் முண்டி முயற்சிக்கும்போது பலமுள்ளவன் முந்துவானென்றும் வர்ணிக்கிறார்கள். இந்தக் கட்சியாளர் ஜனங்களுக்குள் எத்தனைக் கெத்தனை சுய நலங் கருதும் தன்மையுள்ளதோ அத்தனைக்கத்தனை நல்லது என்பார்கள். கட்சிப் பிரதி கட்சிச் சண்டை, முதலாளி



தொழிலாளி சண்டை, தனவந்தர் ஏழையர் சண்டை முதலான பல விதமான சண்டைகள் ஜன சமூகங்களில் உண்டாவது அவசியம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இப்படிச் சதா கலவரமாயிருக்க வேண்டிய ஜன சமூகத்தில் பாலைவனாந்தரத்தில் அகப்பட்ட நீரோடை போல மஹான்கள் வந்து ஜனிக்கின்றார்களே, அது ஏன்? சத்தியத்தை நிலை நிறுத்தவோ மத ஸ்தாபனஞ் செய்யவோ ஏழையர்கள் துக்கங்களைப் போக்கவோ சாதுக்களை ஸம்ரக்ஷிக்கவோ, பலவிதமான இடையூறுகளையும் போக்கிக் கொண்டாகிலும் ஜன சமூகத்தாரால் கல்லாலடிக்கப்பட்டும் முள்ளாலெறியப்பட்டும் வைது திட்டப்பட்டும் தங்கள் உயிரையும் தியாகஞ் செய்துகொண்டு லோக ஸங்கரகஞ்செய்யும் மஹான்கள் பிறக்கின்றார்களே? அவர்களும் குலப்பரம்பராப்ராப்தமென்று சொல்லலாமோ?

பரோபகார சிந்தனை, த்யாகம், ஸந்நியாஸம், முதலான தெய்வ சம்பத்துக்கள் அவர்களாலன்றோ உலகத்தில் பரவுகின்றன? அவர்களும் பிறந்து பிறந்து புனர்ஜன்மமெடுத்தாலன்றோ உலகத்திற்கு நன்மை?

அவ்வப்போது ஈசுவரன் ஒவ்வொரு ஜீவனையும் வெவ்வேறு மாதிரியாகப் படைக்கிறான் என்னும் கொள்கையைக் கொஞ்சம் விசாரிப்போம். அவ்விதம் ஈசுவரன் செய்வானாகில் அவனுடைய ராஜரீகம் அநியாயமான ராஜரீகமாக முடியும். சர்வ சரண்யனான ஈசுவரன் கருணா மூர்த்தியென்று நாம் வர்ணிக்க வேண்டிய விடத்தில் மஹா அநீதமான ராஜன் என்று சொல்ல வேண்டிவரும். ஏனென்றால் அவன் ஒருவனைப் பிறப்பிக்கும் போதே பயித்தியமாகவும், கூனாகவும், குருடாகவும், நொண்டியாகவும், முடமாகவும், செவிடாகவும், பேடாகவும் படைக்கிறானென்று ஒப்புக்கொள்ள வேண்டிவரும். ஒருவனை முழு மூடனாய்ப் படைத்தான், ஒருவனை மஹா தரித்திரனாய்ப் படைத்தான், ஒருவனைக் குற்றவாளியாய்ப் படைத்தான். ஒருவனை வியாதியஸ்தனாய்ப் படைத்தான், ஒருவனை துக்காக்கிராந்தனாய்ப் படைத்தான் என்ற அபவாதச் சொற்களுக்குப் பாத்திரனாவான். மற்றொருபுறம் ஒருவனை

ஞானியாய்ப் படைத்தான், ஒருவனைத் தனவந்தனாய்ப் படைத்தான், ஒருவனைச் சாதுவாய்ப் படைத்தான், ஒருவனைத் திடகாத்திரனாய்ப் படைத்தான், ஒருவனை சர்வ சுகியாய்ப் படைத்தான் என்றபுகழ்வாக்குக்கும் பாத்திரனாவான். அப்படியானால் ஈசுவரனும் பக்ஷபாதமுள்ளவன் என்று முடியும். அப்போது அவன் செங்கோல் கொடுங்கோலென்றே சொல்லவேண்டிவரும். நடுநிலைமை வழுவாது நியாயமாயும் அன்போடும் நடத்துவது ஈசுவரனுடைய ஆஞ்ஞை என்று சகல இதிஹாஸ புராணங்களும் முறையிடுகின்றனவே? அப்படியிருக்க ஈசுவரனுக்கு அறியாமையையும், அசீதத்வத்தையும், அசக்தியையும் அன்பிலாமையையும் ஆரோபித்தல் அடுக்காது.

அதுவுந்தவிர, ஒரே ஜன்மந்தான் ஒரு ஜீவனுக்குளது என்று வைத்துக்கொண்டாலும், பொறுப்பில்லாத ஒரு மனிதன் ஒரு ஜன்மத்தில் அவசனாய்ச் செய்த கிரியைகளுக்குத் தண்டனையோ சம்மானமோ பெறுதல் எவ்வளவு பொருத்தமில்லாத விஷயம் பாருங்கள். ஜீவாத்மா செய்த காரியம் குற்றமென்றே ஒப்புக்கொண்டாலும், அவன் குற்றஞ் செய்த காலையில் அறிவுள்ளவனா, பொறுப்புள்ளவனா, தன்வசத்தனாக விருந்தானா என்று கவனிக்க வேண்டியிருக்கிறது. இப்படியொன்றுமில்லாத வொருவனுக்கு நிரந்தரமான நரகத்தைத் தருவது மிகவும் கொடுமை. அப்படியே அவசனாய் நற்காரியஞ் செய்தவனுக்குச் சுவர்க்கானுபவங் கொடுத்தலும் பக்ஷபாதமாகும்.

மேலும் நமது மத்தியிலேயே மஹா மேதாவிகள் பிறக்கிறார்கள். பலவிதமான தரிசனங்களை ஸ்தாபித்தவர்களான கபிலர், பதஞ்சலி, கௌதமர், ஜைமினி, வியாசர் முதலானவர்களும், பல யோகிகளும், சித்தர்களும், பக்தர்களும், ரிஷிகளும் நமது மத்தியிலே பிறக்கிறார்கள். இந்த மேதாவிகள் பிறப்பதற்கு பிதுருபைதாமகமான பீஜத் தொடர்ச்சி ஒன்று போதுமா? மிகுந்த பக்குவமடைந்திருக்கிற ஜீவாத்மா ஒருவன் ஜன்மமெடுக்கா விட்டால் இந்த ஜ்யோதிஸ் எங்கிருந்துவரும்? நமது தேசத்தில் மாத்திரமல்ல.



உலகமுழுமையும் அப்படியே ஜ்யோதிமான்கள் பிறக்கிறார்கள். ஆர்பூயுஸ், ஹர்மீஸ், ப்ளேடோ, டாண்டே, புரூனோ, ஷேக்ஸ்பியர் நியூடன், லேயோட்வி லோராதுஷ்ட்ரா, ஏசு முதலானவர்கள் அவ்விதமான மேதாவிகளே! மேலும் பால்ய மேதாவிகள் எவ்வளவு பேர்? அவ்வளவு பால்யத்தில் அவ்வளவு அறிவு முதிர்ச்சி எங்கிருந்து வந்தது என்று ஆச்சரியமாக விருக்கிறது. "பிதுருபைதாமக பீஜத் தொடர்ச்சி" இங்கே பலிக்கவே பலிக்காது. நமது நாட்டில் பால்ய மேதாவியான சுகப்பிரும்ம ரிஷி முதல் எவ்வளவோ பேர்களின் கதைகள் நமக்குத் தெரியும். துருவன், பிரஹ்லாதன் முதலானவர்களின் கதைகளைப் பள்ளிப்பிள்ளைகளும் தெரிந்துகொண்டிருப்பார்கள். கொஞ்சம் முயற்சி செய்து ஒரு புஸ்தகம் எழுத வாரம்பித்தாலும் பால்ய மேதாவிகளின் சரித்திரமென்று ஒரு சரித்திரமே எழுதிவிடலாம். சமயகுரவர்களுக்குள்ளே ஞானசம்பந்தர் என்பவர் மூன்று வயதுப்பிள்ளையாக விருக்கையில் தேவாரம் பாடின செய்தியும், யமுனைத் துறைவன் என்னும் ஆளவந்தார் ஐந்து வயதளவில் சோழராஜனுடைய சபையில் வித்வஜ்ஜன கோலாஹலனென்னும் வித்வானுடன் வாதாடிய செய்தியும் யாவரும் அறிந்திருப்பார்கள். இவைகளெல்லாம் புராணங்களென்று தள்ளி விட்டாலும்; இப்போது தற்காலத்தில் பால்யர்களாய் ஆறு எழுவயதே யுள்ளவர்களாய் இருக்கும் சில சிறுவர்கள் மகா வித்வான்களோ என்று யாவரும் திகைக்கும்படி சங்கீத சாஹித்யம் செய்யக் கேட்டிருக்கிறோம். எழெட்டு வருஷங்களுக்கு முன் ஒரு சிறு பையன் ஹரிகதா காலக்ஷேபஞ் செய்துகொண்டு (Boy Bhagavatar) 'பாய் பாகவதர்' என்று பெயர் பெற்றதை நாம் பார்த்தும் கேட்டு மிருக்கலாம். கொஞ்ச நாளைக்கு முன் நமது 'தியாஸபிஸ்டு' என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு பர்மன் குழந்தையைப்பற்றிச் சொல்லியிருந்த விஷயத்தை ஞாபகத்திற்குக் கொண்டுவரலாம். அக்குழந்தை வெளிப்படுத்திய பௌத்தமத ஞானத்தைப் பார்த்து ஷெடி மதாசாரியர்கள் திடுக்கிட்டார்கள் என்று வர்ணித்திருந்தது. மேல் நாடுகளிலும் அவ்விதமே பால்ய

மேதாவிகள்பலருண்டு. டாக்டர் யங் (Dr. Young) ஸர் வில்லியம் ஹாமில்டன் (Sir William Hamilton), ஹெல்லன் கெல்லர் (Helen Keller), பூக்கர் வாஷிங்டன் (Booker Washington) மோஸார்ட் (Mozart) முதலானவர்களின் சரித்திரம் மிகவும் அற்புதமாக விருக்கும். டாக்டர் யங் என்பவர் பௌதிக சாஸ்திர நிபுணர். இரண்டாம் வயதில் செவ்வையாகப் படிப்பாராம். நான்காம்வயது நிறையும் முன்னர் (Bible) பைபிள் என்னும் வேத புஸ்தகத்தை இரண்டுமுறை படித்துவிட்டாராம். கொஞ்ச காலத்திற்கெல்லாம் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது லத்தீன், கிரேக், ஹீப்ரு, பிரஞ்சு, இத்தாலியன், முதலான பாஷைகளைக் கற்றுணர்ந்து கொண்டதாயும், கணிதம், கணக்குப் பதிவு, கடைசற் பிடிக்குந் தச்சு, தூரதிருஷ்டிக் கண்ணாடி செய்தல் முதலான பல தொழில்களைச் செய்யக் கற்றுக் கொண்டதாகவும் சொல்லுகிறார்கள். ஸர் வில்லியம் ஹாமில்டன் என்பவர் மூன்றாம் வயதில் ஹீப்ரு பாஷை கற்றுக்கொண்டாராம். டப்ளின் (Dublin) பட்டணத்தில் ட்ரினிட்டி காலேஜில் (Trinity College) படிக்கும்போது அங்கே உபாத்தியாயர் ஒருவர் இவரை வித்வானுக்கு மேற்பட்டவர் என்று வர்ணித்திருக்கிறார். பதின் மூன்றாம் வயதில் இவர் தெரிந்துகொண்ட பாஷைகள் பதின்மூன்று. அவைகளில் பார்ஸி, அராபி, ஸம்ஸ்கிருதம், ஹிந்துஸ்தானி, மலே ஆகிய பாஷைகளும் அடங்கும். அமெரிக்காவில் ஐக்ய மாகாணங்களில் 1880-ம் வருஷம் பிறந்த பெண்மணி ஒருத்தி ஹெல்லன் கெல்லர் என்பவள். இப்பெண்மணி இப்பவும் ஜீவந்தராக விருக்கிறாள். இரண்டாம் பிராயத்தில் தனக்கு வந்த (Scarlet fever) ஸ்கார்லெட் பீவர் என்ற ஜ்வரத்தால் பஞ்சப் புலன்களில் சக்ஷுஸ், சுரோத்ர, க்ராண இந்திரியங்களான மூன்று புலன்களை யிழந்துவிட்டாள். ஆயினும் அவளுடைய ஆத்ம ஸம்ஸ்கார பலத்தாலும் உபதேசகர் ஸாமர்த்தியமாக உபதேசித்த வழியாலும் தேர்ச்சியடைந்து கணிதத்தில் பீ. ஏ. என்ற பட்டத்தையும் பெற்று இப்போது நாட்டில் வித்வ சபைகளில் தைரியமாகச் சென்று உபந்



யசித்துக்கொண்டிருக்கிறாள். பியானோ (Piano) என்ற வாத்தியப் பெட்டியில் வெகு சாமர்த்தியமாக ஸாஹித்தியமும் செய்வாளாம். அமெரிக்காவில் நீக்ரோ (Negro) என்ற கருப்புவர்ண ஜாதியார்கள் மிகவும் அடிமைகளாக விருந்து வந்தார்கள். அவர்களுள் பிறந்து அவ்வினத்தார்களையே மேல் தூக்கி விடுவதற்காகவோ அல்லது பறையர்களிலும் ஓர் நந்தன் பிறக்கக்கூடும் என்பதைக் காட்டவோ ஒரு மஹான் பிறந்தார். அவர்தான் பூக்கர் வாஷிங்டன் என்பவர். அவருடைய சரித்திரத்தை ஸவிஸ்தாரமாக வாசிக்க வேண்டுமென்ற விருப்பமுள்ளவர் "Up From Slavery" என்றவொரு ஆங்கிலப் புஸ்தகத்தைப் படிக்கவேண்டும். அடிமைகளிற் பிறந்தவொருவன் கலைஞானத்திற் காசைப்பட்டால் முடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டது போலாகுமன்றோ? இந்த வித்யார்த்தி தனது ஆசையை அடக்க வகை யறியாது 500 மைல் நடந்து சென்று ஒரு பள்ளிக்கூடத்தில் வாசற்காப்போனாக உத்தியோகத்தில் அமர்ந்து ஆச்சரியகரமான விடாமுயற்சியால் தனக்கு விரோதிகளான சங்கடங்களை யெல்லாம் நிராகரித்துக்கொண்டார். இவருடைய ஆத்ம சக்தி பூசிக்கத் தகுந்தது. இப்போது அவர் ஒரு பெரிய பள்ளிக்கூடத்திற்குத் தலைமை வகித்து வருகிறார். எம். ஏ. பட்டமும், எல். எல். டி. பட்டமும் தரித்து நாட்டிற்குப் பூஷணமாக விருந்து வருகிறார். மோஸார்ட் என்பவர் சங்கீத ஸாஹித்யம் செய்த ஓர் வித்வான். ஆஸ்த்திரியா தேசத்தில் பிறந்தவர். சிக்ஷை சிறிது மில்லாமலிருக்கையிலும் நான்கு வயது நடந்துகொண்டிருக்கும்போது அபார சங்கீத சாமர்த்தியத்தைக் காட்டினார். இளம்பிராயத்தில் அவர் செய்த ஸங்கீத ஸாஹித்யத்திற்கு லக்ஷணங்கள் அமைந்திருப்பதைப் பார்த்து பிரபலவித்வான்கள் மயங்குகிறார்கள்.

(தொடரும்)

# ஏழாவது அத்தியாயம்

## ஜீவனுடைய யாத்திரை.

(183-ம் பக்கத் தொடர்ச்சி)

கீதை அத்தியாகம் 2 சுலோகம் 59-ல் கூறுகிறபடி, நிராஹாரனான ஜீவனை அதாவது இந்திரியங்களையும், மனஸ்ஸையும் போனபடி ஸஞ்சரிக்க விடாமல் தடுக்கும் அப்பியாஸியை விஷயங்கள் அவைகளாகவே விட்டு விலகினும் ரஸம் மட்டும் நீங்காமலிருக்கும். அதாவது விஷயஸுகங்கள் பிரத்தியக்ஷமாக நேரிட்டபோதிலும் ஜீவனுக்கு அவைகளிடத்தில் அஸஹ்யமானது ஸஹஜமாக உண்டாகிக் கொண்டுவரும். ஆனாலும் அவைகளில் அபிருசி மாத்திரம் ஸூக்ஷ்மமாக நின்றே யிருக்கும். அதுவும் விட்டுப் போவதற்கு ஆத்மஸாக்ஷாத்காரம் வேண்டும். அதற்குப் பிறகு தான் ஐஹிகஸுகத்தில் ஆசைகள் கிரமக் கிரமமாகக் குறைந்து கொண்டு வரும்பொழுது அவைகளைவிட நீடித்தகாலம் இருக்கக்கூடியவையும், சாமான்யமாகத் துக்கத்துடன் சேர்க்கைகளில்லாத ஸ்வர்க்க ஸுகங்களிடத்தில் வாஞ்சைகளைத் திடமாகக் கொண்டுவரும். இஹலோக ஸுகங்கள் நிரம்பவும் அல்பகாலமிருக்கிறவை என்றும், அவைகளை யடைவது எப்போதும் துக்கத்திற்குக் காரணமென்று மறிந்து, ஆமுஷ்மிக ஸுகம் என்ற ஸ்வர்க்கலோக ஸுகத்தைக் கோரி அதை ஸாதிக்கக் கூடிய கிரமங்களிலதிக சிரத்தையுள்ளவனாவான். கேவலம் ஸ்தூல சரீரஸம்பந்தமான தத்கால ஸுகத்தைவிட்டு அதைவிட சாசுவதமான பரலோக ஸுகத்தை ஸம்பாதிக்க வேண்டுமென்ற இச்சையால், உபவாஸங்கள், விரதங்கள், தேவபூஜைகள், உபாஸனைகள் முதலிய செய்து அவைகளின் பலனாகிய ஸ்வர்க்கலோக ஸுகத்தை அடைவான். ஆனாலும் அந்த ஸுகங்களும்கூட முடிவு உள்ளவைகளே யாகையால், ஸ்வர்க்க லோகத்தின் அனுபவகாலம் முடிவு பெற்றதும் “க்ஷீணே புண்யே மர்த்ய லோகம் விசந்தி” என்ற சுருதிப் பிரமாணத்தை அனு



ஸரித்து, அந்த லோகத்திலிருந்து திரும்பி பூலோகத்தில் புனர்ஜனனத்திற்கு வரத்தான் வேண்டி இருக்கும்.

கீதை அத்தியாயம் 7-ல் 20 முதல் 24 வரை சுலோகங்களில் கூறியபடி நாநாவிதங்களான காமங்களால் அபஹரிக்கப்பட்ட ஞானமுள்ளவர்களாகிச் சிலர் பூர்வ கர்மானுஸாரமான ஸ்வபாவத்தால் கட்டுப்பட்டவர்களாகி அனேக நியமங்களை அனுஷ்டித்துக் கொண்டு இதர தேவதைகளை உபாஸனை செய்வார்கள். அந்தக் காமங்களிலிருந்து என்னால் விதிக்கப்பட்ட பலன்களை அடைவார்கள். ஆனாலும் அப்படிப்பட்ட அற்ப புத்தியுள்ளவர்களுக்கு உண்டாகும் பலன்கள் முடிவு உள்ளவைகள் தானே யல்லவா?

அந்த ஸமயத்தில் ஜீவனுக்கு துக்கம் வந்துகொண்டேதானிருக்கிறது. இம்மாதிரி அனுபவமானது அனேக ஜன்மங்களிலுண்டாகவும், ஜீவனுக்கு ஐஹிக விஷயங்களில் போலவே ஆமுஷ்மிக ஸுகங்களிலும் தீவிரமான வைராக்கியம் அபிவிருத்தியாகும். அப்போது, இதைவிட உத்தமமான ஸ்திதி இருக்குமாவென்ற ஆராய்ச்சி யுண்டாகும். ஜீவன் ஈசுவராம்சனாகையால் எப்போதும் ஆனந்த ஸ்வரூபன், ஆனந்தத்தையே கோரிக்கொண்டிருக்கிறவனல்லவா? அந்த ஆனந்தமும் முதலில் இஹலோகத்திலும், பிறகு பரலோகங்களிலும் உண்டாகுமென்றும் அந்த லோகங்களிலுள்ள ஸுகமெல்லாம் துக்கத்திற்கு மூலமானதென்ற ஞானம் திடமாக உண்டான பிறகு, தான் மாறுதலுக்குள்ளான பிரகிருதி என்றெண்ணுகிற வரையில் மாறாத ஆனந்தத்தை அடைய ஸாத்யமில்லை என்றும் விகாரமடையாதவனும் அழியாதவனுமான பரமாத்மா தான் தானென்ற நிச்சயபுத்தி யுண்டாவதினால் தான் மாறாத சுகம் கிடைக்கக் கூடுமென்றும் சுருதிஸ்மிருதியாதி பிரமாணக் கிரந்தங்களிலிருந்தும் அனுபவம் பெற்ற பெரியோர்களிடமிருந்தும் அறிந்துகொண்டு, அந்த பகவத் ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ள வெகு பிரயத்தனம் செய்வான். அது முதல் கிரந்த விசாரத்தாலும், அனுபவஞானமுள்ள பெரியோர்களை ஆசிரயித்து அவர்களால் ஞானோபதேசம் பெறுவதாலும் ஆத்மஸ்வ

ரூபத்தியானத்தாலும், கிரமக்கிரமமாக ஆத்ம ஸாக்ஷாத்காரம் அடையவும் ஆத்மஸ்வரூபானுபவத்திற்கும் யத்தனப்படுவான். இந்த அப்யாசம் பஹுகாலம் செய்வதில், பகவானுடையவும், பகவத்ஸ்வரூபிகளாகிய மஹாத்மாக்களுடையவும் கிருபையினாலும் ஸ்வரூப ஞானம் பிரத்தியக்ஷமாயுள்ளவனாய் ஆத்மஸ்வரூபனே யாவான். அப்படிப்பட்ட மஹானுபாவனிடத்தில் அபாரமான பக்தியும், பூததயையும், பரிபூர்ணமாகப் பரிணமித்திருக்கும். அப்படிப்பட்ட மஹனீயன் லோகத்தில் எப்படி நடந்துகொள்வானோ அதைச் சிறிது ஸங்கிரஹமாக இந்த இடத்தில் விவரிப்போம்.

ஆதிமுதல் ஸம்ஸார ஸமுத்திரத்தில் மூடனாகியிருந்து அதன் கஷ்ட ஸங்கடங்களை அறிந்திருப்பதால், பாமரர்களாக இருக்கிறவர்களிடத்தில் அதிகமான கருணை யுடையவனா யிருப்பான். தான் லௌகிக கார்யங்களில், பலனை எதிர்பார்த்துப் பிரவிருத்தித்துக் கொண்டிருந்த காலத்தில் காமக்குரோதங்களுக்கு உட்பட்டு எப்படி நடந்துகொண்டிருந்தானோ, அப்படியே, பிறர்களும் இருப்பார்கள் அல்லவா என்று அப்படிப்பட்டவர்களை த்வேஷிக்காமல், அவர்களிடத்துள்ள லோபங்களைக் கணக்கிடாமல், க்ஷமிக்கும் ஸ்வபாவமுள்ளவனாவான். ஞானம் ஸம்பாதிப்பதற்குத் தான் எவ்வளவு கஷ்டப்பட்டானோ எவ்வளவு ஆவலுடன் மற்றவர்களின் ஸஹாயத்தை அபேக்ஷித்தானோ, அப்படியே இதரர்களும், பிறர்களுடைய ஸஹாயத்தைக் கோருவார்கள் அல்லவா என்று பரோபகாரம் செய்யும் எண்ணம் கொண்டிருப்பான். தான் அஜ்ஞான தசையிலிருந்த காலத்தில், இதரர்களிடமிருந்து எவ்வளவு மேன்மையடைந்தானோ அவைகளை எல்லாம் கணக்குக் கொண்டுவந்த மாதிரியாக, இப்போது தனக்குள்ள சரீரம், ஞானம், திரவியம் எல்லாவற்றையும், பரோபகாரார்த்தம் விநியோகம் செய்து தன்னுடைய முன் கடன்களைத் தீர்த்துக்கொள்வான். தனக்குத் தேகத்தில் பலமிருந்தால் தன்னைவிட பலஹீனர்களுக்கு ஸஹாயம் செய்வான். தனக்கு வித்யையும், ஞானமும் அதிகமாக இருந்தால் தன்னைவிட கீழ் ஸ்திதியிலிருக்கிறவர்களுக்கு, வித்யாதானம்செய்து ஞானத்தை



அபிவிருத்தி செய்வான், தன்னுடைய திரவியமும், போகங்களும் பரோபகாரார்த்தமாக பகவானால் தனக்குக் கொடுக்கப்பட்டதென்று அவைகளை பரோபகாரார்த்தமாக உபயோகிப்பான். இப்படித் தான் அஜ்ஞானதசையிலிருந்த காலத்தில் வாங்கியிருந்த கடன்களை கிரமக்கிரமமாகத் தீர்த்துக் கொள்வான். எப்போதும் ஸ்வப்பிரயோஜனத்திற்காக இதரர்களிடத்திலிருந்து கொஞ்சம்கூட கிரஹிக்க ஸம்மதிக்காமல் எப்பொழுதும் தானே பிறருக்கு இடுவதையே விரதமாகக் கொண்டிருப்பான். அதாவது பிரவிருத்தி மார்க்கத்தைப் பூரணமாக விட்டு நிவிருத்தியையே அனுஷ்டித்துக் கொண்டு வருவான். பகவானுலகத்தில் நியமிக்கப்பட்ட வேலை செய்கிறவன்போல் எண்ணிக்கொண்டு, ஈஸ்வராஜ்ஞையை அனுஸரித்து நடப்பதைவிட வேறு உத்தேசமில்லாமல் நடந்துகொண்டு வருவான். எந்தக் கார்யம் செய்ய முயன்றாலும் அதை ஈசுவராஜ்ஞையாகப் பாவித்து, ஈசுவர கைங்கரியமென்றெண்ணி, ஈசுவரனந்தக் கார்யத்தைச் செய்தால் எவ்வளவு நன்றாகச் செய்வானோ அந்த மாதிரியாக சிரத்தையுடன் நன்றாகச் செய்வான். அந்த கார்யத்தால் தனக்கென்ன லாபம் வருமோ, என்ன நஷ்டம் வருமோ எனும் யோசனை கொஞ்சமேனும் இராது. செய்ய நோக்கம் கொண்ட கார்யம், நியாயமா, ஸத்தியமா, பிறருக்கு உபகாரம் உண்டாகும்படியானதா, ஈசுவரனுடைய இச்சானுசாரமாக இருக்குமா என்றுமாத்திரம் யோசிப்பானே தவிர, தனக்காகிலும் தன்னுடைய பந்துக்கள், மித்திரர்களுக்காகிலும், லாபகரமா அல்லது கஷ்டத்திற்குக் காரணமாகுமாவென்று எவ்வளவேனும் யோசிக்கமாட்டான். லோகோபகாரமாகவும், நியாயமாகவுமிருந்தால் தனக்கெவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் பின் வாங்காமல் நிறைவேற்றுவான். ஸமஸ்த காரியங்களையும் நிறைவேற்றுகிறவன் ஈசுவரனே தான் என்று தன்னை ஈசுவரனுடைய அங்கமாகப் பாவித்து, பிரதிபலனைக் கொஞ்சம்கூட அபேக்ஷிக்காமல், எல்லாக் கார்யங்களையும் நன்றாக நிறைவேற்றுவான். இப்படிப்பட்ட காரியங்கள் பந்த மூலங்கள் ஆகாது. (கீதை அத்தியாயம் 3 சுலோகம் 9) இப்படி

உலகத்தில் கர்மங்கள் செய்துக்கொண்டிருந்தும் பக்தனாக இராம விருப்பதே யோகமென்று பகவான் கீதா சாஸ்திரத்தில் நிர்வசனம் செய்திருக்கிறார்.

“யோக: கர்மஸு கௌசலம்” எல்லாக் காரியங்களையும் பாமரர்களைப் போல் செய்துகொண்டிருந்தும் அந்தரங்கத்தில் நிஸ்ஸங்கனாய் அஹங்கார மமகாரங்களைவிட்டு ஸர்வ பூதத்திற்கும் ஹிதனாக நடந்து கொள்வான். அப்படிப்பட்ட மஹானுபாவனிடத்தில் கர்மம், பக்தி, ஞானம், இம்மூன்றும் பரிபூர்ணமாகப் பிரகாசிக்கும். அப்படிப்பட்டவர்களுக்கு உலகத்தார் ஸுகமே தங்கள் ஸுகம், லோகதுக்கமே தங்கள் துக்கம். அப்படிப்பட்ட மஹநீயர்களை உத்தேசித்தே யல்லவா பகவான் கீதா சாஸ்திரத்தில், பக்தர்கள் லக்ஷணங்களை நிரூபணம் செய்யுங்கால் கீதை 12-வது அத்தியாயம் 13, 14, 18, 19-வது சுலோகங்களில், விஸ்தரித்திருக்கிறார். “எந்தப் பிராணியையும் பகையாதவனும், நண்பனாயிருப்பவனும், தயையுள்ளவனும், மமகாரம் நீங்கியவனும் அஹங்காரம் ஒழிந்தவனும் துன்ப இன்பங்களை சமமாகக் கொண்டவனும் பொறுமையுடையவனும் எப்பொழுதும் திருப்தி யுடையவனும் அடங்கிய ஸ்வபாவத்தையும் உறுதியான நிச்சயத்தையும் உடையவனுமான யோகியாய் என்னிடத்து மனம் புத்தி இவற்றைச் செலுத்திய என்பக்தன் எவனோ, அவன் எனக்குப் பிரியமானவன்.” “இவன் பகைவனிடத்தும் நண்பனிடத்தும் ஒப்ப நிற்பவன். அவ்வாறே மானத்திலும் அவமானத்திலும், குளிரிலும், வெப்பத்திலும், இன்பத்திலும் துன்பத்திலும் ஒப்ப நிற்பவன், பற்றில்லாதவன், இகழ்ச்சி புகழ்ச்சிகளை ஸமமாகக் கொண்டவனும், மௌனமுடையவனும், எதனாலாயினும் திருப்தியடைபவனும் வீடில்லாதவனும், மனம் நிலைத்தவனும் பக்தியுள்ளவனுமான மனிதன் எனக்குப் பிரியன்.”

எ. ராமஸ்வாமி சாஸ்திரி.

## ஸௌசீலை அல்லது உண்மையின் வெற்றி

223-வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி.

### 11-வது காட்சி—சபாபதி வீடு.

2/10796.

பிரவேசம்—சபாபதி ஸௌசீலை.

சபா:—இப்படியும் நான் கஷ்டப்பட ஈசன் என் தலையி லெழுதினானோ? என்ன உலகமிது? உண்மை யழியாம லுஜ்ஜீவிக்க வழியில்லாமற் போயிற்றே. இதென்ன விபரீதம்? கெட்ட நடத்தைகளுக் கிருப்பிடமா யிருக்கும்போதெனக்குக் கஷ்டமே தெரியவில்லை. அவைகளை யொழித்து நன்மார்க்கத்திற் புகுந்த பின்ன ரிவ்வளவு சங்கடமெனக்கு நேர்ந்திருக்கிறதே. ஸௌசீலே, இன்னுமெவ்வளவு நாட்களுக்குப் போதுமானது உன்னிடம் மீதியிருக்கும் பணம்?

ஸௌ:—நாதா, பணம் செலவழிந்து போய் நாலு நாட்களாய் விட்டதே. கடன் வாங்கி யல்லவோ இந்த நாலு நாட்களாக காலக்ஷேபம் செய்கிறோம்.

சபா:—(திடுக்கிட்டு) என்ன? என்னிடமேன் முன்னமேயே சொல்லவில்லை?

ஸௌ:—நாதா, ஏற்கனவே நொந்துருகிக்கொண் டிருக்கும் தங்களுடைய காதிலிந்த சமாசாரத்தையும் போட்டுத் தங்களை யதிகமான துக்கத்திற்காளாக்கவும் வேண்டுமோ?

சபா:—(முகம் வாடினவனாய்) என் கண்ணே, இந்த சமயத்தில் நீயுமெனக்கில்லாம லிருந்தால்—ஈசா—ஸௌசீலே, நீயுன் காரியத்தைக் கவனி. (ஸௌசீலை போகிறாள்)

ஆஹா, இப்படியு மென்கதியாயிற்றா? நானென்ன செய்வேன்? எனக்கொன்றும் தோன்றவில்லையே. நான் குருவினிடத்தில் வைத்திருக்கும் பக்திக்கிதுவா பலன்? என்னை யிக்கோலம் காட்டுவதற்கா அவர் தோன்றி என்னிடமிருந்தென் பொய்யைத் தானமாக வாங்கிக்கொண்டு சென்றார்? குருபக்தி வெகு சிலாக்

கியமான தென்கிறார்களே? எனக்கிக்கதி வாய்ப்பானேன். அம்மஹாராணுக்கென்மீதிருக்கும் பிரியமானது நான் இக்கஷ்டதசைக்கு வரும்படி அவரைச் செய்ய விடாதே! வேண்டுமென்றொரு நாளுமென்னை இந்த சங்கடத்திற்குள்ளாக்க மாட்டார்—இப்போது நானென்ன செய்வது? எனக்கு ஒரு யோசனையும் புரியாமலிருக்கும்படி என் மதிகுலைந்து விட்டதே. இரண்டிலொன்று நிச்சயம், பொய்யுரைக்காமலெப்படியாவது தனம் சம்பாதிக்க வேண்டும். இல்லாவிட்டால் நானும் ஸுசீலையும் உயிர் துறக்க வேண்டும். உயிர் துறப்பதா? எனக்குள்ளிருந்து ஒரு எண்ணம்புறப்படுகின்றது. அரசனுடைய தர்மம் பிரஜைகளைக் காப்பது. அவனது பொக்கிஷத்திலிருக்கும் தனம் ஜனங்களுடைய ஹிதத்துக்காகவே ஏற்பட்டது. நினைக்க முடியாதபடி கஷ்டப்படுகிற எனக்குதவாத பணம் ராஜ பொக்கிஷத்திலிருப்பானேன். எனக்கதில் பாத்யமுண்டு. ஆகவே, இன்றிரவு நானெப்படியாவது ராஜ பொக்கிஷத்தைக் கொள்ளையிட வேண்டும். ஜாக்கிரதையாக ஒருவருமறியா வண்ணம், மானத்துடன் ஜீவனம் செய்ய எவ்வளவு சொத்து எனக்கு வேண்டுமோ அவ்வளவை மட்டும் களவிட்டு அதைக் கொண்டினி என் வாழ்நாட்களைக் கழிக்கிறேன். இக்காரியம் முடிவு பெறுவதற்குள் எனக்கபாயம் நேரிடுமானால் அப்படியே என்னுயிர் போகட்டும். பாதகமில்லை. அதைப்பற்றியெனக்குக்கவலையேயில்லை. இருந்து கஷ்டப்படுவதிலுமுயிர் துறப்பது எவ்வளவோ மேன்மையானது. அதற்கு வேண்டிய வேற்பாடுகளைச் செய்கிறேன்—மாறு வேடம் பூண்டு செல்லவேண்டும். பெரிய ரஸ்தாவழி போகாமல் குறுக்குப் பாதையாய்ப் போக வேண்டும்—ஸுசீலே!

(ஸுசீலை வருகிறாள்) துலுக்க வேஷத்திற்கு வேண்டிய சாமான்களை யின்று சாயந்திரத்திற்குள் தயார் செய்துவை. (ஸுசீலை திடுக்கிட்டுப் போகிறாள்) நான் தீர்மானித்தாய் விட்டது. இதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும். (போகிறான்).

(காட்சி முடிகிறது.)



## 12-வது காட்சி—அரண்மனை.

### பிரவேசம்—அரசனும் ராணியும்.

**ராணி:**—என்ன ஆச்சரியம்? இப்படியுமொரு அற்புதமுண்டோ நமது ராஜ்யத்தில்?

**அர:**—இது அற்புதமாகத் தானிருக்கிறது. நம்முடைய ஆளுகையி லிவ்வளவு உத்தியோகஸ்தர்களிருந்தும், மந்திரி, சேனாதிபதி கொத்தவால் முதலியவர்கள் முயன்றும் அக்களவுகளின் ரஹஸ்யத்தைக் கண்டறிய முடியவில்லையே. எனக்கொன்றும் தோன்றவில்லை. நடந்த களவுகள் விசேஷமான, மனிதர்கள் கண்டு பிடிக்க முடியாத, அமானுஷ்யக் களவுகளா யிருக்க வேண்டும், அல்லது நமது உத்தியோகஸ்தர்கள் திறமை யற்றவர்களா யிருக்க வேண்டும். எது வாஸ்தவமென்றெனக்குத் தெரியவில்லை. எப்படியாவதிதைக் கண்டறிய வேண்டும்.

**ராணி;**—தங்களுடைய ராஜ்யத்திலு மித்தகைய சம்பவம் நடைபெறுவதுண்டா? என்ன விபரீதமிது?

**அர:**—எனக்கொரு யோஜனை தோன்றுகிறது.—

ஆம், அது தான் சரியான யோஜனை. அப்படியே செய்கிறேன்.

**ராணி:**—என்ன யோசனையது? நாதா!

**அர:**—அரசன் பிரஜைகளைக் காப்பதற்காக ஏற்பட்டுள்ளவன். அப்பரிபாலன விஷயத்தில் தனது சகாயத்திற்காக மந்திரி முதலிய உத்தியோகஸ்தர்களை நியமித்துக் கொள்ளுகிறான். ஆனால் உண்மையான பொறுப்பரசனுடையதேயாம். இப்போதிவ்விராஜ்யத்தில் நடந்திருக்கும் களவுகளின் உண்மை யிவ்வுத்தியோகஸ்தர்களுக்குத் தெரியாமற் போனதைக் கண்டு பிடிக்க வேண்டியது என்னுடைய கடமை.

**ராணி:**—(ஆச்சரியத்துடன்) என்ன? நாதா!

அர:—ஆம், அதென்னுடைய கடமைதான். அதிற் சந்தேகமேயில்லை. முன் காலத்தில் ஹாரோன் அல்ராஸ்சிட் என்று சொல்லப்பட்ட அரசன் தனது மந்திரியுடன் இரவில் நகர சோதனைக்காகப் போவது வழக்கமென்று கேள்விப் பட்டதில்லையா? அந்த மாதிரி ஒவ்வொரு அரசனும் செய்யவேண்டிய அவசியம். நானந் நாளதுவரையில் செய்யாமலிருந்தது தவறு. இனியாவது அத்தவறை மாற்றுகிறேன். நானின்றிரவு மாறுவேடம் தரித்து அரண்மனையை விட்டு வெளிக்கிளம்பி இரவில் நகரிலும் இன்னுமருகிலுள்ள மற்ற விடங்களிலு மிரவிலென்னென்ன விநோதமான விஷயங்கள் நடந்து வருகின்றன வென்பதைக் கண்டறிகிறேன்.

ராணி:—நாதா, இதென்ன விந்தை! நீங்களாவது இரவில் தனியாக வெளியில் போவதாவது! ஐயோ, நீங்களப்படி யொன்றும் செய்யவே கூடாது. இத்தகைய காரியங்களுக்குப் பழக்கப்படாததல்லவா தங்களுடைய சரீரம்?

அர:—நீ சொல்வது சரியல்ல. அரசன் தனது ஹிதத்தைக் கவனித்துத் தனது பிரஜைகளின் நலத்தைக் கருதாதிருப்பது ஞாயமல்ல. என் தேகம், என் தனம், எனது சைன்யம், எல்லாமெனது குடிகளின் நன்மைக்கே ஏற்பட்டது. என் தேகத்திற் கபாயம் நேருமோ வென அஞ்சி எனது தர்மத்தை நடத்தாதிருப்பது பெரும் பாபமாகும். என் வார்த்தைக்குத் தடை கூறாதே நீ. நானெவ்வளவு ஜாக்கிரதையாய்ப் போய்வர முடியுமோ அவ்வளவு ஜாக்கிரதையுடனே செல்கிறேன். நீ யொன்றுக்கு மஞ்ச வேண்டாம்.

ராணி:—தங்களுடைய சரீரம் ராஜ சரீரமல்லவா? அதை மற்ற சரீரத்திற் கொப்பாகச் சொல்ல முடியாது. தங்கள் சரீரத்திற் கொருவிதத் தீங்கும் நேரிடலாகாது; விஷ்ணுவினம்சம் பொருந்தியிருக்கிற தங்களுடைய தேகமேதேனும் சங்கடத்திற் குள்ளாகுமானால் நமது ராஜ்யத்திற்கே க்ஷேமக்குறை வேற்படும்.



அதனால் தாங்க ளிவ்விஷயத்தி லிவ்வளவு அலக்ஷியஞ் செய்யலாகாது.

அர:—அந்த விஷய மெனக்கும் தெரியும். என் தேகத்திற் கொன்றும் நேரிடா வண்ணம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நான் காலை ஐந்து மணிக்கு முன்னாலேயே திரும்பி வந்து விடுவேன். அப்படி வராத பக்ஷத்தில் நானுதவி வேண்டி நிற்பதாகத் தெரிந்துகொள். உடனே நான் வெளியில் போயிருக்கிற சமாசாரத்தை மந்திரிக்குத் தெரியபடுத்தி நாலு திக்குகளிலு மென்னைத் தேட ஆள்களனுப்பச் சொல். ஆனாலப்படி யொன்றும் நேரிடாதென்று எனக்குத் தோன்றுகிறது.—நான் மாறு வேஷம் போட்டுக்கொள்ள வேண்டும்; எந்த வேஷம் தரிக்கலாம்—திருடர்களைக் கண்டு பிடிக்கப் போவதால் திருடனைப் போல்தான் போக வேண்டும். அப்படிச் செய்தால் தானவர்களுடைய உள் அந்தரங்கமெல்லாம் நன்கு தெரியவரும். அதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்வோம்.—நான் வெளியே போகிற விஷய முன்னைத் தவிர வேறொருவருக்கும் தெரியக் கூடாது. ஜாக்கிரதை! காலை 5 மணிக்குத் திரும்பி வாராமற் போனால் பிறகு மந்திரிக்குத் தெரியப்படுத்து.

(திரை விழுகிறது)

ஆர். சீனிவாச[illegible] ஏ.,

---

# தற்கால நிலைமை.

---

நாளது பிப்ரவரி மாதத்தில் 21, 22 உகளில் திருச்சினாப்பள்ளி ஜில்லா லால்குடி என்ற கிராமத்தில் ஷை ஜில்லா பிராஹ்ம[illegible] கிளைச் சங்கங்களின் 5-வது பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதின் அக்கிராசனத்தை வகிக்கும் பொறுப்பை நான் பெற்றேன்.

பிப்ரவரி௴ 20௳ மாலையில் திருச்சிறாப்பள்ளி டௌன் ஹாலில் நாஷனல் கன்வென்ஷன் சபையோரால் பிரசுரிக்கப்பட்ட இந்திய சுய ஆட்சி மசோதாச்சட்டத்தைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தேன்.

* * * * *

வால்குடியில் 21௳ மாலையில் நான் தற்காலத்தில் தோன்று நிற்கும் ஆரம்ப சின்னங்களால் நாம் தெரிந்துகொள்ளத்தக்க "புதுக் கல்பத்தை"ப்பற்றி உபந்யாஸம் செய்தேன். தஞ்சாவூர் ஹைஸ்கூல் ஸமஸ்கிருத பண்டிதர் பிரஹ்மஸ்ரீ பி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் "ஜகத் குரு"வைப்பற்றி உபந்யாசம் செய்தார்கள். வணங்குடி மகா-ா-ா-ஸ்ரீ வி. ராமச்சந்திர நாயுடு அவர்களும் மோசூர் சுப்பிரமணிய அய்யரவர்களும் அவதாரங்களைப்பற்றி புகைப்பட காட்சியுடன் உபந்யாசம் செய்தார்கள். ஷை சுப்பிரமணிய அய்யரவர்கள் "பராபக்தி" என்ற விஷயத்தைப்பற்றியும் 22௳யில் உபந்யாசம் செய்தார்.

* * * * *

22௳யில் ஸ்திரீகளின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதற்கு அக்கிராமத்திலுள்ள பல சீமாட்டிகள் விஜயம் செய்தனர். அந்த ஸ்திரீகளை கூடும்படி செய்து அவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்து அந்த மீட்டிங்கில் நடைபெற வேண்டிய விஷயங்களை விளக்கி அதைப் பயன்பெறச் செய்தது பெரும்பாலும் திருச்சிறாப் பள்ளியில் டிஸ்திரிக்ட் முனிசீபாயிருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ பி. சுப்பாராவ் அவர்களின் மனைவியாரின் சிரத்தையும் இடைவிடா முயற்சியுமேயாகும். இவர்கள் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பிரஹ்மஞானப்பொதுக்கூட்டத்திற்கும் இன்னும் மற்ற இடங்களுக்கும் சென்று பிரசங்கம் செய்திருக்கின்றனர். பிரஹ்மஞான விஷயங்களில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பக்தி ஆழ்ந்தும் உயர்வுற்றும் இருக்கின்றது.

* * * * *



ஐரோப்பா கண்டத்தில் உலாந்தா தேசத்தில் ஓர் கௌரவம் பெற்ற குடும்பத்தைச் சார்ந்த பாரன் வான் பல்லாண்ட் என்ற பிரபுவானவர் தனக்குச் சொந்தமான அகிழ் சூழ்ந்த மாளிகையையும் அதைச்சேர்ந்த 5000 எக்கர் விஸ்தீரணமுள்ள பூமியையும் ஜகத் குருவானவர் மனிதர்கள் முன் வெளித்தோன்றி இப்புவியில் விஜயம் செய்யும் காலத்தில் அவருக்கு அர்ப்பணமாகும் பொருட்டு உதயநக்ஷத்திர சங்கத்திற்கு நன்கொடையாக அளித்திருக்கின்றனர். அம்மாளிகை "ஈரடு" என்னும் ஊரில் இருக்கின்றது. அம்மாளிகைக்கு அடுத்திருக்கும் 'ஓம்மன்' என்ற ஊரில் சென்ற வருஷத்தில் ஐரோப்பா கண்டத்தில் உள்ள உதய நக்ஷத்திர அங்கத்தினர்கள் ஓர் பொதுக் கூட்டம் கூடினார்கள். அதில் ஸ்ரீமான் ஜே. கிருஷ்ண மூர்த்தி அவர்களும் விஜயம் செய்திருந்தனர்.

* * * * *

அந்த 'ஈரடு' என்ற இடமானது ஐரோப்பா கண்டத்திலுள்ள உதய நக்ஷத்திர சங்கத்தாரின் பிரதான ஸ்தானமாக ஏற்படப் போகின்றது. அம்மாளிகையானது சுமார் 200 வருஷங்களுக்கு முன்னர் கட்டப்பட்டது. அக்கட்டிடத்தின் அமைப்பும் அதினுள்ளிருக்கும் சாமான்களும் அதி விநோதமானவையாயும் விலை உயர்ந்தவையாயும் இருக்கின்றன. தேவர்களுக்கும் மானிடர்களுக்கும் ஆசாரியராய் ஜகத் குருவாய் விளங்கும் மைத்திரேய மகரிஷியின் வருகை மிகவும் சமீபத்திலிருக்குங்கால் அவர் நாமத்தால் செய்யப்பட்டிருக்கும் இந்நன்கொடையானது சமயோசிதமாயுள்ளது. அவ்வூரில் 1922-ம் வருஷத்தில் பிரஹ்மஞான சபையின் முதல் நோக்கத்தின் சார்பாய் 'புது கல்ப சகோதர சங்கத்தார்' என்ற ஓர் கூட்டத்தை ஸ்தாபிக்க எத்தனம் செய்யப்பட்டது. அதைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய சுய நன்மையைக் கருதாது பொது நன்மைக்காக உழைப்பதே அவர்களுடைய வாழ்க்கையின் பெரு நோக்காகக் கருத வேண்டும். அவர்கள் பிரஹ்மஞான சங்கத்தின் அங்கத்தினர்களாயும் இருத்தல் வேண்டும். அவர்கள் புலான் மறுத்தலை

அனுஷ்டித்து லாகிரி வஸ்துக்களை திரஸ்கரித்தல் வேண்டும். அவர்கள் அக்கூட்டத்தின் பொதுநன்மையின் பொருட்டு திரவிய சகாயம் செய்வதன்றி சரீரப் பிரயாசையால் உழைத்தல் வேண்டும். ஆனால் அந்த "புது கல்ப சகோதர சங்கத்தார்" என்ற ஸமாஜமானது ஸ்தாபிக்கப்படவில்லை.

*  *  *  *  *

ஆனாலும் ஸ்ரீமான் ஜே. கிருஷ்ணமூர்த்தியானவர் அப்பேர்ப்பட்ட ஐக்கிய வாழ்க்கையுடன் கூடின ஓர் உதய நக்ஷத்திர கூட்டத்தை "ஈர்டு" என்ற ஸ்தானத்தில் இப்பொழுது ஏற்படுத்த வேண்டுமென ஆவலுற்றிருக்கின்றனர். அதற்கு வேண்டிய திரவிய சகாயம் முதலிய சௌகரியங்கள் ஏற்பட்டவுடன் அவ்வூரில் ஸ்தாபிக்கப்படுமென்று தோன்றுகின்றது.

*  *  *  *  *

இவ்விதமாக பச்சிம கண்டத்தில் ஜகத்குருவின் வருகையை எதிர்நோக்கிக் கொண்டாடுவதற்கும் அவருடைய உபதேசங்களைப் பரவச் செய்வதற்கும் ஓர் மத்திய ஸ்தானம் ஏற்பட்டு அதை இன்னும் பலப்படுத்த ஸ்ரீமான் ஜே. கிருஷ்ணமூர்த்தியும் இவ்வருஷம் அவ்விடத்திற்குச் சென்று அடையாற்றில் பிரம்மஞான சபையின் 50-வது வருடோத்சவக் கொண்டாட்டமானது அடுத்த டிஸம்பர் மாதத்தில் நிகழ்வதற்கு முன்னமேயே இந்தியாவிற்குத் திரும்பப் போகின்றனர்.

*  *  *  *  *

ஆஸ்திரேலியா தேசத்தில் "ஸிட்னி" என்ற நகரத்தில் சமுத்திரத்திற்கருகில் ஓர் மகா மண்டபம் நிர்மாணம் ஆகி வருகின்றது. ஜகத்குருவின் உபதேசங்கள் நிகழ்வதின் பொருட்டு அக்கட்டிடம் கட்டப்படுகின்றது. அதில் பிரசாரத்திற்குரிய நவீன சாதனங்கள் யாவற்றும ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அம்மண்டபத்தில் அங்கத்தினர்கள் தங்குவதற்கும் பிரசங்கங்கள் நடைபெறுவதற்கும், சங்கீதக் கச்சேரிகள் நிகழ்வதற்கும், நாடகங்கள் நடத்தப்படுவதற்கும்



படிக்க விரும்புவோர்கள் படிக்க விரும்பும் புஸ்தகங்கள் வைப்பதற்கும், இன்னும் நாகரீகம் கலை முதலியவை சம்பந்தமான கிளர்ச்சிகள் தழைத்தோங்குவதற்கும் அநேக ஏற்பாடுகள் நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன.

*  *  *  *  *

... ஜகத்குருவின் வருகையானது சமீபித்து நிற்கின்றது. அது நம்பிக்கைக்குரிய மனோ பாவனை மட்டுமல்ல. நமது ஐம்புலன்களுக்கும் சமீபத்தில் வெளித்தோன்றத் தக்க ஸ்தூல விஷயமே என்று கருதி இவ்வாறு முயற்சிகள் ஊக்கமாக நடந்து வருவதே அவரது வருகைக்கு ஓர் அத்தாக்ஷியாகும்.

ஏ. ரெங்கஸ்வாமி அய்யர்.

210796.

# OFFICIAL NOTICE.

## ISSUED BY THE GENERAL SECRETARY, INDIAN SECTION THEOSOPHICAL SOCIETY.

The following names of the COUNCILLORS OF THE INDIAN SECTION are circulated amongst the members of the Section in compliance with the resolutions passed by the Convention of 1920:

### COUNCILLORS.

1. General Secretary,
2. Joint General Secretary,
3. Assistant General Secretary,
4. Mr. C. R. Parthasarathi Iyengar, High Court Vakil, Chittoor.
5. Babu Damodar Prasad B. Sc., Theosophical Society, Benares,
6. Mr. Jamnadas Dwarkadas, B. A., 11—13 Church Gate Street, Fort, Bombay,
7. Mrs. D. Jinarajadasa, Theosophical Society, Adyar,
8. Dr. V. S. Trilokekar, L. M & S. Kalbadevi Road, Bombay,
9. Prof E. K. Telang, M. A., L. L. B., Theosophical Society, Benares,
10. Babu Hirendra Nath Datta M. A., B. L., 139 Cornwallis Sreet Calcutta,
11. Justice. K.S. Chandrasekhara Iyer, Bangalore
12. Mrs. Chandrasekhar Iyer, c/o Justice K. S. Chandrasekhara Iyer, Bangalore.
13. Rai Bahadur Panda Baijnath, Madhav Sao's House, Kamacha, Benares,
14. Mr. Manjeri S. Rama Iyer, Vasantasrama Chalapuram. Calicut,
15. Mr. A. Rangaswami Iyer, Pleader, Hall of Theosophy Madura,